# தம்புள்ள பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகள் செயலாற்றல் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 வருமான நிருவாகம்

**நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 4,014,332 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,453,800 |

#### 1.2.2 வீட்டு வாடகை

2009 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவையாக இருந்த முடுக்கு சுற்றுலா விடுதி வாடகை மற்றும் அரசாங்க வீட்டு வாடகை ரூபா 98,164 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 வியாபார வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏங்பாடுகளின் பிரகாரம் சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா ஹோட்டல் வருமானத்தில் 1% இனை விஞ்சாத வியாபார வரி அறவிட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டிற்காக அவ்வாறான 03 ஹோட்டல்களில் வியாபார வரித்தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்ட ரூபா 92,580 பெறுமதியான 05 பௌதீக வள விடயங்கள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத 06 விடயங்கள் என்பன காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டன.

### 1.2.5 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 341,086 பெறுமதியான 33 பொருள் விடயங்களின் 366 அலகுகளும், பெறுமதி கணிப்பிடப்படாத 23 பொருள் விடயங்களின் 57 அலகுகளும், 823 நூலகப் புத்தகங்களினதும் பற்றாக்குறைகள் வெளிப்படுத்தப்பட்டன.

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி 17 ஊழியர்கள் நாளாந்த சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் சனவரி தொடக்கம் திசெம்பர் வரை சம்பளமாக ரூபா 2,481,283 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 100,000 இற்கு மேற்படுகின்ற வாகனப் பழுதுபார்த்தலுக்காக அமைச்சுச் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் அவ்வாறான

அங்கீகாரமின்றி 252-6503 ஆம் இலக்க கப் வாகனத்தை பழுதுபார்க்கும் வகையில் 2009 பெப்ரவரி 06 ஆந் திகதி தனியார் கராஜ் ஒன்றிலிருந்து ரூபா 210,716 தொகையான மதிப்பீடு வழங்கப்பட்டிருந்தது. அந்த பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக வாகனத்தை அனுப்பாமையின் காரணமாக மீண்டும் ஒரு தடவை 2011 யூலை 18 ஆந் திகதி மேற்கூறப்பட்ட கராஜிற்கு கையளிக்கும் போது ரூபா 2,068,408 தொகையான மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. சபையின் நலிவான முகாமைத்துவத்தின் காரணமாக மேற்கூறப்பட்ட பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 1,875,692 தொகை மேலதிகமாகக் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 மற்றும் 6.3 ஆம் வழிகாட்டிகளின் ஆலோசனையின் பிரகாரம் கேள்வி கோரப்படாமல் HW – 1745 ஆம் இலக்க மோட்டார் கிரேடரின் பழுதுபார்த்தல் மற்றும் 06 டயர்களின் கொள்வனவு என்பவற்றுக்காக ரூபா 790,936 தொகை செலுத்தப்பட்டிருந்தன. அவ் வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பழுதுபார்த்தலுக்காக உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் திருபத்திகரமாக மேற்கொள்ளப்பட்டமைக்கான மோட்டார் வாகன பரீட்சகரின் அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 திசெம்பர் 18 ஆந் திகதிய பீஎப் - 437 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்கப் பிரிவிற்குரிய சகல வாகனங்களினதும் காப்புறுதிப் பூட்கை நேரடியாக தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தில் அல்லது வ.ப இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட வேண்டிய போதிலும் சபைக்குரிய 03 வாகனங்களின் காப்புறுதிப் பூட்கை ஏனைய கம்பனியிருந்து பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 163,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 மற்றும் 6.3 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் பொதுப் போட்டியாளர் கேள்வி முறைமை மற்றும் பதிவுத் தபால் மூலம் கூறுவிலைகள் கோரப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் பிழையாக 03 நேரடிக் கூறுவிலைகள் பெறப்பட்டு எவ்வித எழுத்துமூல உடன்படிக்கையுமின்றியும் சபை அங்கீகாரமின்றியும் தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளுக்காக தனியார் வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. வாகனம் காப்புறுதி செய்யப்பட்டமை மற்றும் உரித்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித ஆவணங்களும் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே

தலைவரின் பிரயாணத்திற்காக இந்த வாகனம் ஈடுபடுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய எவ்வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2011 ஏப்ரல் மாதம் தொடக்கம் 2012 யூலை 18 ஆந் திகதி வரை வாகன வாடகையாக ரூபா 1,602,000 தொகை செலுத்தப்பட்டிருந்தன. கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட்ட காசோலைகளின் குறுக்குக்கோடுகள் நீக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டவைகளை கணக்காய்வின் பொது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) CPHW – 1745 ஆம் இலக்க மோட்டார் கிரேடர் வெளிநிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் சனவரி 02 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறு வாடகைக்கு வழங்கப்பட்டு 319 மணித்தியாலத்திற்காக (பெறுமதி சேர் வரி சேர்த்து) ரூபா 880,387 தொகையான வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அனேகமான சந்தர்ப்பங்களில் பொது நிதியத்திலிருந்து செய்யப்படுகின்ற வேலைகளுக்காக மோட்டார் கிரேடர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் உரிய ஒப்பந்தச் சங்கங்களின் பற்றுச்சீட்டுக்களைத் தீர்க்கும் போது அதற்காக மோட்டார் கிரேடருக்கு ஏற்பட்ட பராமரிப்புக் கிரயம் கழிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கழிக்கப்படாமல் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையும் ஒப்பந்தச் சங்கங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆவது அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பதவி நிலைத்தர உத்தியோகத்தரல்லாத வருமானப் பரிசோதகருக்கு 1/20 விடுமுறை தினச் சம்பளம் 05 தினங்களுக்கு ரூபா 4,280 தொகை செலுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாளும் நிறைவேற்றப்பட்ட கடமைகள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்தும் 15 சந்தர்ப்பங்களில் மேலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை தினச் சம்பளமாக மீளாய்வாண்டின் போது ரூபா 47,480 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(எ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4, 6.3 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிரவாகம்) விதிக்கோவையின் 207 மற்றும் 208 ஆம் விதிகளின் பிரகாரம் பொதுப் போட்டி அடிப்படையைப் பின்பற்றாமல் நேரடியாகக் கூறுவிலை பெறப்பட்டு ரூபா 156,265 தொகையான மின்சார உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதியில்

ரூபா 42,165 பெறுமதியான உபகரணங்கள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 490,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட நிகவட்டன எவரிய உள்பத்த உபவீதிக்குக் கொங்கிரீட் இடும் வேலையின் விடய இல. பீ – 4 இல் 265’x0’x9.0’’x6’’ அளவில் வீதியைக் கொங்கிரீட் இடுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டில் திருத்தம் செய்தல் அல்லது சபையின் அங்கிகாரமின்றி 240’.3’’x9.0’’x8’’ அளவில் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதனால் வீதியை மதிப்பீடு செய்யப்பட்ட பிரகாரம் 25’ அடி இன்னும் போடுவதற்கு முடியாதிருந்தது. அதன் பெறுமதி ரூபா 44,232 ஆகும்.

(ஆ) நிகவட்டன எவரிய உள்பத்த கெசெல்வத்த வீதியை மீள் நிர்மாணிக்கும் வேலையில் 135.57 கனமீற்றருக்கு கிரவல் போடுவதற்காக ரூபா 150,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2012 ஆகஸ்ட் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட வேலையின் அளவு 126.30 கனமீற்றராக இருந்தமையினால் செய்யப்படாத 9.27 மீற்றருக்காக ரூபா 11,960 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) ஜாதிக சவிய, கமநெகும, நிதி ஏற்பாடுகளின் கீழ் வெலன்கொல்ல புஸ்ஸெல்ல குளத்தில் அணைக்கட்டை செய்யும் வேலைக்காக வெலன்கொல்ல சமுர்த்தி வங்கிக்கு ரூபா 827,176 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வேலைக்காக சாத்தியவள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கமநல சேவைத் திணைக்களம் அல்லது பொறுப்புவாய்ந்த நிறுவனத்தின் அங்கீகாரம் அல்லது சிபார்சுகளைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணப் பிரதேசத்திலுள்ள விவசாயச் சங்கத்திற்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டின் பிரகாரம் குளத்தின் அணைக்குமேல் கிரவல்போட்டு நீர்விட்டு நன்றாக செப்பனிடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மணல் கலந்த மண் போடப்பட்டு நன்றாக செப்பனிடப்படாமையினால் குளத்தின் அணைக்கட்டு இருபக்கமும் வெடித்து நீரில் கழுவிச் செல்லப்பட்டு கவனிப்பாரற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தமை

2012 ஆகஸ்ட் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

400 மீற்றர் தூரத்திற்கு குளத்தின் அணைக்கட்டை நிரப்புவதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் மண் நிரப்பப்பட்ட பகுதியின் நீளம் 307 மீற்றராக இருந்தமை அவதானிக்கப்பட்டமையினால் 238 கனமீற்றருக்காக ரூபா 135,898 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 1.2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த 19 ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 108,059 தொகையான மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 993,484 தெகையான முன்னைய வைப்புக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்நிமித்தக் கட்டுநிதி வழங்கப்படுகின்ற செயற்பாடு நிறைவடைந்ததும் உடனடியாகவே தீர்க்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 481,972 தொகையான முற்பணம் 2012 அகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 07 நிரந்தர உத்தியோகத்தர்கள் இருக்கும் போது காசோலை எழுதுதல், கொடுப்பனவுக் காசேடு எழுதுதல், செலவினப் பதிவேடு எழுதுதல் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பராமரித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய பிரதான செயற்பாடுகள் சபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

## 2. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு